**செய்தி வெளியீடு எண் : 31** **நாள்: 13.07.2025**

**ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு – பத்திரிக்கை செய்தி**

**மருத்துவர் தின விழா - ஆளுநரின் 'எண்ணித் துணிக' பகுதி - 19: மருத்துவ ஆளுமைகளுடன் கலந்துரையாடல்**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, அவர்கள் மருத்துவர் தின விழா - ஆளுநரின் 'எண்ணித் துணிக' பகுதி - 19: மருத்துவ ஆளுமைகளுடன் கலந்துரையாடல் "மருத்துவர் தினம் என்பது ஒரு நாளுக்குள் மட்டும் சுருக்கமுடியாத மரியாதை" – தமிழ்நாடு ஆளுநர் உரை.

தமிழ்நாட்டின் ஆளுநர் இன்று தெரிவித்தது: "ஜூலை 1ஆம் தேதி தேசிய அளவில் 'மருத்துவர் தினம்' கொண்டாடப்படுவது முக்கியமானது தான். ஆனால், அதைவிட முக்கியமானது – ஒவ்வொரு நாளும் மருத்துவர்களைப் போற்றி வாழ்வது. ஏனெனில், சமூகத்தில் துயரமான தருணங்களில் நினைவுக்கு வருவது முதலில் ஒரு மருத்துவர்தான். அதனால் தான் அவர்களை 'உயிருள்ள கடவுள்' என அழைக்கிறோம்."

### கார்கில் யுத்தத்தில் இழந்த வீரர்களை விட கோவிட் யுத்தத்தில் இழந்த மருத்துவர்கள் அதிகம் :

"கோவிட் பெருந்தொற்று இந்தியா முழுவதும் பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தியபோது, தங்களுடைய உயிரையே பணயம் வைத்து மக்கள் உயிரைக் காப்பாற்ற முனைந்தவர்கள் மருத்துவர்களே. நாம் கார்கில் போரில் வீரர்களை இழந்ததைவிட, கோவிட் காரணமாக உயிரிழந்த மருத்துவர்களின் எண்ணிக்கையே அதிகம். இது மரணத்தையும் மீறிய தியாகம். அந்த நேரத்தில் எந்த மாநிலத்திலும் ஒருபோதும் 'நான் வரமாட்டேன்' என்று கூறிய ஒரு மருத்துவரின் தகவல் கூட இல்லை," என்று ஆளுநர் கூறினார். அவர் மேலும் கூறியது: "மருத்துவர்கள் வீட்டை விட்டு விலகி, குடும்பத்தினரிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட சூழலில் வாழ்ந்தும் சேவையில் ஈடுபட்டார்கள். அவர்களின் சேவை சாதாரணமல்ல – அது ஒரு மகத்தான தியாகம்.

### மருத்துவர்களுக்கான மரியாதை – பாடப்புத்தகங்களில் இடம் பெறவேண்டும் :

"மருத்துவ சேவையை வெறும் சந்தை பரிமாற்றமாக அல்ல, ஒரு புனிதமான கடமையாக சமூகமே பார்க்க வேண்டும். பாடப்புத்தகங்களில் ஆசிரியர்களைப் போல், மருத்துவர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். 'மருத்துவரை மதிக்க வேண்டும்' என்ற சமூகக் கலாசாரத்தை கட்டாயமாக வளர்க்க வேண்டும்," என்றார் ஆளுநர்.

### தமிழ்நாட்டின் முன்னேற்றம் – நாடு முழுவதுக்கும் வழிகாட்டி :

"தமிழ்நாடு, மருத்துவத் துறையில் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக உள்ளது. உலகம் முழுவதிலும் இருந்து நோயாளிகள் சிகிச்சைக்காக தமிழகத்தை நாடுவது பெருமைக்குரிய விஷயம். இங்கு தரமான மருத்துவ சேவை மட்டுமல்ல, நெறிமுறைகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது" என்று கூறினார்.

### நலமுள்ள வாழ்க்கை – ஒரு தேசிய கடமை :

"நமது மக்களின் உடல் நலமே நாட்டின் வளர்ச்சிக்குத் தூணாக இருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட 'Fit India Movement' அதன் ஒரு அங்கமாகும். இந்தியா 2047க்குள் முழுமையாக அபிவிருத்தியடைந்த நாடாக மாற வேண்டும் என்ற நோக்கில் நாம் உறுதி எடுத்திருக்கிறோம். அது சாத்தியமாக இருக்க, மக்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்," என அவர் வலியுறுத்தினார்.

### மருத்துவர்கள் தேசியச் சொத்து :

“ஒரு மருத்துவரின் உடல்நலம் மற்றும் வாழ்நாள்கள் தனிப்பட்டது மட்டுமல்ல, சமூகத்தின் சொத்துகளாகவும் பார்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு மருத்துவரும் ஒரு தேசியச் சொத்து. நீங்கள் ஒரு நலமுள்ள இந்தியாவை உருவாக்குவதில் பெரிய பங்காற்றுகிறீர்கள்,” என்று ஆளுநர் கூறினார்.

**இயற்கையோடு ஒத்த வாழ்கை – நூறு ஆண்டுகளுக்கும் மேலான வாழ்க்கை :**

“பண்டைய இந்தியாவின் வாழ்க்கை முறை 100 ஆண்டுகள் வாழ்க்கை தரக்கூடியதாக இருந்தது. நாகாலாந்து போன்ற மாநிலங்களில் நான் நேரில் பார்த்த 100 வயதைக் கடந்தோர் இயற்கையோடு ஒத்த வாழ்கையைக் கொண்டிருக்கின்றனர் – அதுவே சான்று,” என்றார்.

**மருத்துவர்கள் அறிவுரை – சமூகத்துடன் தொடர்புடைய டாக்டர்கள் :**

“மருத்துவர்களே, உங்கள் அறிவுரைகள் பள்ளிகளுக்கும், இளைஞர்களுக்கும், பொதுமக்களுக்கு மீண்டும் மீண்டும் பகிரப்பட வேண்டும். நீங்கள் மட்டும் அல்ல, உங்கள் வார்த்தைகளும் மக்கள் வாழ்வை மாற்றும். உங்கள் சேவை மதிப்பிட முடியாதது – அதை ஒரு இயக்கமாக மாற்ற வேண்டும். ‘நலமுள்ள இந்தியா’ என்ற இயக்கமாக,” என ஆளுநர் கூறினார்.

**சமூகத்தின் பொறுப்பு :**

“மருத்துவர்களை மதிப்பது, அவர்களை பாதுகாப்பது என்பது சமூகத்தின் பொறுப்பு. அது ஒவ்வொருவரின் கடமையாக இருக்க வேண்டும்,” என மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

……………………………………………………………………………………………………………………………………

ஆளுநர் மாளிகை, சென்னை-22 வெளியீடு :-
நாள்: 13.07.2025 மக்கள் தொடர்பு அலுவலகம்